2nd April 1958]

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, போலீஸ் அனுமதி பெற்றுத்தான் எந்தவிதமான நிகழ்ச்சிக்கும் தற்போது ஒலி பெருக்கி வைக்கவேண்டியிருக்கிறது. அப்படி அனுமதி கேட்கும்போது 2 ரூபாய் கட்டணம் கட்டித்தான் கேட்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த கட்டணத்தை ரத்து செய்து அனுமதி பெறுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிச் செய்வதாக உத்தேசம் இல்லை. மைக்ரோபோன் கூட இலவசமாகக் கிடைப்பதில்லை. வாடகை கொடுத்துத்தான் வைக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து லைஸென்ஸ் கொடுக்கவேண்டியிருப்பதால் இந்த லைஸென்ஸ் கட்டணம் இருக்கத்தான் வேண்டும்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that at public meetings gramophone records should not be played before the speakers begin to address the meeting and that the rule in this regard is not strictly applied to public meetings organized by Opposition parties? Even last night one such party had the liberty of playing records at Kodambakkam.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A separate question may be put.

SRI A. VEDARATHNAM : வண்டிகளில் இந்த ஒலி பெருக்கியை வைத்துக்கொண்டு வீதிகள் தோறும், வீடுகள் தோறும் வந்து நின்று அலறுகிறார்கள் (சிரிப்பு). அந்தச் சத்தம் அங்கே சகிக்கவே முடிவதில்லை. அந்தமாதிரியான இடையூறுகளை நீக்கி, ஒரு தடை ஏற்படுத்த இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சம்பந்தப்பட்ட விதிகளை மாற்றும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதையும் பரிசீலனை செய்துபார்க்கலாம்.

Ex-Servicemen Land Colonizing Agricultural Society

* 513 Q.—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation, dated 26th July 1957, has been received regarding administrative irregularities and misappropriation of funds from the members of the Ex-Servicemen Land Colonising Agricultural Society of Orthanad, Thanjavur district; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The allegations are being examined in consultation with the Registrar of Co-operative Societies.

SRI A. R. MARIMUTHU : லேண்ட் காலனைஸேஷன் சொஸைடியில் இம்மாதிரி ஏற்பட்டதன் காரணமாக அந்த நிலத்திற்கு தனியாகப் பட்டா செய்துகொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது. கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய வேண்டுமென்று கூட்டுறவு எண்ணம் வளர்ச்சியடையும்போது, இந்த எண்ணம் வளர்ச்சியடையாமல் கூட்டுறவு முறையில் நடத்த வேண்டுமென்ற எண்ணம் வளர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த சொஸைடி நன்றாகத்தான் நடந்துகொண்டிருந்தது. அதிலே ஏதோ ஒரு தவறு ஏற்பட்டது. அதனால் அந்தக் கணக்குப் புத்தகங்களையெல்லாம் கிணற்றில் போட்டுவிட்டார்கள். அதனால் கடன் கொடுப்பதில் சற்று கால தாமதம் ஏற்பட்டது. இந்த சொஸைடியைப்பற்றி இதற்கு முன்னால் புகார் இல்லை. தனித்தனியாக நிலம் கிடைத்தால் லாபமாக இருக்கும் என்று நினைத்து கிளர்ச்சி செய்கிறார்கள். இதற்கு சர்க்கார் இடம் கொடுக்காது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : It seems the Government received the representation as early as 26th July 1957. May I know the reason why the Government have not taken a decision in the matter even after a lapse of so many months till now?

THE HON. SRI R. VENKATARAMAN : The representation was received earlier—11th July 1957, and the matter was referred to the Police. The Police reported the case as undetectable on 26th October 1957. Further representation was received on 4th November 1957 and fresh enquiries have started since then.

SRI K. B. S. MANI : இந்த சொஸைடிகள் இல்லாத இடங்களில் சர்க்கார் உத்திரவின் பேரில் அவர்கள் ஆக்கிரமித்திருக்கும் நிலங்களை அவர்களுக்கு, அடமானம் செய்து கொடுக்க, அவர்களுக்கு தனிச் சலுகை கொடுக்க, அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a general question. A separate question may be put.

District Munsifs

* 514 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons appointed temporarily as District Munsifs in 1957 ; and

(*b*) among them (i) the number belonging to Backward Classes, and (ii) number of Harijans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Twenty seven persons were appointed as temporary District Munsifs in 1957.

(*b*) Of them, 7 belong to Backward Classes and there are no Harijans.

SRI V. S. MANICKASUNDARAM : Was not the selection intended for filling up permanent posts? Or were they temporary appointments from the beginning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : These were temporary appointments to fill up temporary vacancies. They were made by transfer and not by direct recruitment.

SRI M. JAGANNATHAN : If the information is available, may I know how many posts were reserved for Harijans, how many people applied and how many were selected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In respect of these temporary appointments which are made by transfer, there is no reservation for any community.